(முற்பகல் 9-30)

திற்குச் சென்று, 1975 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட குற்றச் சாட்டுக்கு 1980, 198 ஆம் ஆண்டுகளிலே நடவடிக்கை எடுப்பது தவறு என்று வாதித்தார். அதை உயர்நீதி மன்றமும் ஏற்றுக் கொண்டு, அது தவறு என்று தீர்ப்பு அளித்திருக்கிறது. அதனாலே தான், நீதிமன்றத்தின் ஆணைக்கு ஏற்பவும், பரம்பரை அறங் காவலர் நிலைக்கு ஏற்பவும இப்போது புதியதாக அவர் செய் திருக்கிற எல்லா தவறுகளையும், ஊழல்களையும் கண்டுபிடித்து புதியதாக அவர்மீது நடவடிக்கை எடுப்பதற்கும், அவரைத் தற்காலிகமாக இந்தப் பதவியிலிருந்து நீக்கம் செய்து வைப் பதற்கும் ஆணையாளர் அவர்களிடமிருந்து அரசுக்கு ஆலோசனை வந்திருக்கிறது. அரசு இதைத் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண் டிருக்கிறது.

சென்னை தேனாம்பேட்டையிலுள்ள விவசாயத் தோட்டக் கலைக் கழகம்

334—

* வினா எண் 19021—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை தேனாம்பேட்டையிலுள்ள விவசாயத் தோட்டக்கலைக் கழகத்தை சுற்றுலாப் பூங்காவாக மாற்றி யமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன்; (அ) ஆம்.

(ஆ) சென்னை தேனாம்பேட்டையிலுள்ள விவசாய தோட்டக்கலை கழகத்திடம் கொடுக்கப்பட்டுள்ள 91.6 கிரவுண்டு நிலத்தைத் திரும்ப பெறுவதற்கான நடவடிக்கை வருவாய்த் துறையினரால் எடுக்கப்பட்டுள்ளன. அதனை திரும்பப்பெற்றதும் சுற்றுலா பயணிகளுக்கு பயன்படும் வகையில் அதனை சுற்றுலாத் துறைக்கு மாற்ற தகுந்த நடவடிக்கை எடுப்பது பற்றி பிறகு பரிசீலிக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த்துறை எடுத்தபிறகு, அந்த நிலம் சுற்றுலாத் துறைக்கு மாற்றப்பட்டு, அது சுற்றுலா மையமாக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி எடுப்பதற்கு எவ்வளவு காலமாகும்? அது சுற்றுலா மையமாக்கப்பட்டு, அதிலே செய்யப்பட இருக்கின்ற அபி விருத்திப் பணிகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்?

1984 மார்ச் 16]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அது நீண்ட காலத்திற்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்ட ஒரு நிலம். அதை எடுப்பதிலே எவ்வளவு பெரிய சிக்கல்கள் வருமென்பதை இப்போது சொல்ல முடியாது. அரசிடமிருந்து இந்தக் கருத்து அறிவிக்கப்பட்டபோது, அந்தக் கருத்தை அரசு ரத்து செய்துவிட வேண்டும். அதை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று அவர் தெரிவித்திருக்கிறார். ஆகவே, வருவாய்த் துறையின் நடவடிக்கை நிறைவேற்றப் பெற்று, அரசுக்கு அந்த நிலம் திரும்பப் பெறப்பட்டதற்குப் பிறகு, திரும்ப வருவாய்த்துறைக்கு அந்த நிலம் வந்ததற்கு பிறகு அந்த நிலத்தை சுற்றுலாத் துறைக்கு மாற்றியதற்குப் பிறகுதான் சுற்றுலாத் துறையின் கைக்கு அந்த நிலம் வந்ததற்குப் பிறகுதான், அதிலே என்ன செய்ய முடியும் என்பதை பரிசீலிக்க இயலும். குழந்தையே பிறக்கவில்லை என்று சொல்வதைவிட, கருவே உருவாகவில்லை என்ற சூழ்நிலை இருக்கிறபோது, ன்ன பெயரிடலாம் என்று இப்போது சொல்ல முடியாது என்பதைத் தெ வித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கருவே உருவாகவில்லை என்றாலும், திருமணம் ஆகியுள்ளதாக ஒப்புக்கொண்டதற்கு நன்றி. அந்த நிலம் எவ்வளவு காலத்திற்கு அவருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அந்த குத்தகைக் காலம் முற்றுப் பெற்று விட்டதா? வருவாய்த் துறை அந்த இடத்தைத் திரும்பத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். விரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திருமணம் நடந்துவிட்டது என்கிறார்கள். திருமணப் பேச்சு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. திருமணம் இன்னும் நடைபெறவில்லை. ஆனால், எவ்வளவு காலத்திற்கு இந்தக் குத்தகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் என்னிடம் இல்லை. ஆனாலும், ஒரு நீண்டகால குத்தகைக்கு வெள்ளைக்காரர்கள் ஆட்சிக்காலத்தில் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்கின்ற அளவில் இன்றைக்கு விவரம் இருக்கிறது.

பெருஞ்சாணிப் பகுதி ரப்பர் தோட்டத்தின் கீழுள்ள
தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்து.

335—

(வினா எண் 20028) —திரு டி. மணி: மாண்புமிகு செய்தி அற நிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981–82ல் பெருஞ்சாணியிலிருக்கக் கூடிய ரப்பர் தோட்டத்தின் கீழுள்ள ரப்பர் உலர வைக்கும் (மோக் கோஸ்) ரப்பர் தொழிற்சாலையில் தீப்பிடித்ததால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு?